கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
மலர்: 97 இதழ்: 37
புரட்டாசி 30— 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# அளவுகடந்த பேச்சால் பலம் குன்றுகின்றது

— கருதினல் ஹீனன்

சுமார் 500 கிறீஸ்தவ சபைத் தலைவர்கள் அடங்கிய மகாநாடு சென்றவாரம் ஆங்கில நாட்டில் பெர்பிங்காம் நகரில் ஆங்கில கிறீஸ்தவ சபைத் தலைவர் ருப்சே அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. ஆங்கில கத்தோலிக்கர் சார்பில் உரையாற்றிய கருதினல் ஹீனன் அடிகளார் வத்திக்கான் சங்கத்தின் நற்பயன்கள் யாவற்றிலும் ஒற்றுமை இயக்கத்துக்கு அது அளித்த ஊக்கத்தையே மிகப் பெரிதாக்கத் தான் கருதுவதாகக் கூறினர். ஒற்றுமை இயக்கம் மாபெரும் வெற்றிகளை அண்மையில் கண்டுள்ளது என்றும், அவை யாவும் பேச்சுக்களை அத்துமீறி அளவுகடந்து செய்யாததனல் அடையப்பட்டவையென்றும், அளவுகடந்த பேச்சுக்களால் செபம் குறைந்து, பலம் குன்றுவது தவிர நன்மை அடைய முடியாது என்றும் கூறினர். பேச்சும் அவசியம். அதனல் விளக்கம் ஏற்படும். குறைகள் நிவிர்த்தியாகும். ஆனல், அவை அளவுக்கு மிஞ்சினல் அபாயமே விளையும் என்ருர் கருதினல் அடிகள். இன்றைய—உலகில், ஜனநாயக முறையென்னும் போர்வையில் எடுத்ததெல்லாவற்றுக்கும் விவாதமும் ஆலோசனைச்சங்கங்களும் நடைபெறுவது நன்மைபயப்பதாக தமக்குத் தோற்றவில்லை என்று கூறிய அடிகளார் ஒற்றுமை இயக்கம் மேலும் முன்னேற, நாம் செபத்திலும் செயலிலும் கண்ணுயிருக்க வேண்டுமென்ருர்.

## ஐக்கிய அமெரிக்கதேச தேர்தலில் கத்தோலிக்க கொள்கைகள்

இவ்வருடம் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் நடைபெற இருக்கும் ஜனதிபதித் தேர்தலில் கத்தோலிக்க கொள்கைகளை ஆதரிக்கும் கட்சிக்கே பெரும்பாலும் கத்தோலிக்கர் தமது வாக்குச் சீட்டுகளை அளிப்பார்கள் எனக் கூறப்படுகிறது— பாரம்பரியமாக கத்தோலிக்கரும் யூதசாதியினரும் டெமொக்கிருற் கட்சியையே ஆதரித்தனர். ஆனல், கருநீக்கும் கொள்கையை ரிப்பப்ளிக்கன் கட்சியினர் வெளிப்படையாகக் கண்டித்து வந்ததாலும் டெமொக்கிருற்கட்சி அபேட்சகர் மக்கவண் இது பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறத்தவறியதாலும் இம்முறை கத்தோலிக்கர் பலர் ரிப்பப்ளிக்கன் கட்சியை ஆதரித்தால் ஆச்சரியத்துக்கு இடமில்லை. மேலும் ஜனதிபதி நிக்சன் இஸ்றயேல் தேசத்தின் ஆப்த நண்பனுக செயலளவில காண்பித்திருப்பதால் யூதஇனத்தவர்களிற் பெரும்பாலானவர் றிப்பப்ளிக்கன் கட்சியையே ஆதரிப்பார்கள் எனக்கூறப்படுகிறது.

## சமாதானத்துக்காக அயர்லாந்தில் ஒருமைப்பாடு

அயர்லாந்து தேசத்திலுள்ள கத்தோலிக்கர்கள், அயர்லாந்து கிறீஸ்தவ சபையினர், பிறெஸ்பிற்றேரியன் மக்கள், மெதடிஸ்ற் சபையினர் யாவரும் ஒன்றித்து அந்நாட்டின் சமூக பிரச்சினைகளுக்கு நீதியான நிரந்தரமான முடிவு காணத் தேவனுடைய உதவிக்காக ஒன்றித்து மன்றுட ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். இப்பிரார்த்தனைக் கூட்டங்கள் குறிக்கப்பட்ட இடங்களிலே திறந்த வெளியரங்கங்களில் ஐப்பசி 1-ம் திகதி சாயுங்காலை ஆரம்பிக்கப்பட்டு, பின்பு குமிக்சப்படும் நாட்களில் நடைபெறும்.

## ஒரு நகரைக்காத்த வீரக்குரு

சிசிலி தீவுத் தென்கரையோரத்திலுள்ள காசிலெம் மாறே என்ற சிறுபட்டணத்தின் விசாரணைப் பங்குக்குருவாயிருந்த வண. கியாக்கோமோ கஜொசொ சுவாமியாரை சிசிலித்தீவு மக்கள் இலகுவாக மறந்துவிடமாட்டார்கள். 2-ம் உலக யுத்தத்தில் இவரால் அந்த நகரம் காக்கப்பட்டது. நேசதேச படைகள் ஆபிரிக்காவிலிருந்து சிசிலிதீவில் இறங்க ஆயத்தம் செய்தபோது அக்காலத்தில் சிசிலியிலிருந்த ஜேர்மன் படைத்தலைவர் இந்த நகரத்திலுள்ள சிறுமலையைக் குடைந்து வெடிமருந்திட்டு அழித்துவிடத் திட்டமிட்டிருந்ததை அறிந்த குருவானவர் அந்த ஜேர்மன் தலைவரைத் தந்திரத்தினல் மயக்கி அத்திட்டத்தைக் கைவிடச் செய்துவிட்டார். நேசதேசப் படைகள் சிசிலியிலிறங்கி இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் இக்குருவானவரை அந்நகர மேயராக நியமித்தனர். சென்றவாரம் இக்குருவானவர் காலமானபோது சிசிலிமக்கள் அவருக்கு மாபெரும் வீரனுக்குரிய அடக்கம் கொடுத்து சந்மானித்தனர்.

## கம்போல அதிமேற்றிராணியாரில் யூகண்டா ஜனதிபதி சீற்றம்

யூகண்டா ஜனதிபதி அமின் அத்தேசத் தலைநகரப்பிரதேச ஆயர் அதிமேற்றிராணியார் நிசுபுகா அடிகளாரில் சீற்றங்கொண்டு அவர்தேச முன்னேற்றத்துக்கு இடையூறு செய்யத்தக்க அளவில் அரசியல் விஷயங்களில் ஈடுபடுவதாகப் பாப்பரசருக்கு முறைப்பாடுசெய்ய ஆலோசனைகள் செய்துவருவதாக அறியக்கிடக்கின்றது பிரித்தானியா பிரசைப்பத்திரம் கொண்ட ஆசியரை யூகண்டாவிலிருந்து கார்த்திகை 6-ம் திகதிக்குமுன் வெளிப்படுத்தும் கருமம் அநீதியானதும் மனிதாபிமானமற்றதுமென அதிமேற்றிராணியார் கருதிவருவதால் அவர் பிரித்தானியரின் சார்பில் தேச அபிவிருத்திக்குக் கேடுவிளைவிக்கின்ருர் என்கிருர் ஜனதிபதி. தனது கொள்கைகளை அதிமேற்றிராணியார் உட்பட வேறுபல சமயத்தலைவர்களின் ஆதரவுடன் பிரித்தானியர் நாசப்படுத்துவதாக அவர் கருதுகிருர். ஆகவே கத்தோலிக்க சமயத்தை அந்நாட்டில் பரிபாலனஞ்செய்ய அதிமேற்றிராணியார் நிசுபுகாவின் இடத்தில் தமக்கு இணங்கத்தக்க ஒருவர் இருப்பதே அவர் விருப்பம். ஜனதிபதி அமினின் கொள்கை அநீதியானது, மனிதாபிமானமற்றது என ஆங்கில நாட்டுப்பிரதம மந்திரி, எதிர்கட்சித்தலைவர், யூ. என். ஓ. காரியதரிசி முதலிய பலர் கூறியுள்ளனர்.

## கத்தோலிக்கர் கல்விச்சபைக் கருத்தரங்கில்

சென்ற வாரம் கொழும்பு புனித பிறிஜெட் கன்னியர் மடக்கல்லூரியில் நடைபெற்ற கத்தோலிக்க கல்விச்சபைக் கருத்தரங்கில் இந்நாட்டின் பிரபல்யமிக்க கல்விமான்கள் பலர் பங்குபெற்று இந்நாட்டின் கல்வி முறைப்போக்கைப்பற்றி மக்கள் மத்தியில் சிந்தனைவளர உதவியிருக்கின்றனர் கல்வித்துறையில் அனுபமிக்க பேராசிரியர் கே. நேசையா இந்த அரசாங்கத்தினரால் தயாரிக்கப்பட்டு வாழ்க்கைத் துறைகளுடன் கலாசாலைப் பாடங்களைத் தொடர்பு படுத்தும் புதிய முறையைப் பாராட்டினர். ஆனல் சர்வகலாசாலைகள் யாவற்றையும் அரசாங்கம் ஒருமுகப்படுத்தினதை அவர் வன்மையாகக் கண்டித்தார். பிரதேச ரீதியில் சர்வகலாசாலைகள் நிறுவுதலே நாட்டுக்குப் பயனளிக்கும் என்பதே அவரது துணிபு. அருட்திரு. கெனத் பெர்ணுந்து அடிகள் கிறீஸ்தவசபைகள் செய்துவரும் கல்வித்தொண்டு சமூக அநீதிகளை அகற்றவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் கிராமப்பகுதி மக்களுக்கு புத்துயிர் கொடுக்கவும் வேண்டுமென ஆலோசனை கூறினர். திரு. கொட்பிறிகுணதிலக அவர்கள் விவசாய, கைத்தொழில் வேலைகளின் மாட்சியை புதியகல்வி முறை மக்கள் உணரச்செய்ய வைக்கவேண்டுமென்ருர். மேலும் கலாநிதி பிறேமதாச உடகம முதலியோர் கல்வித்திணையினர் சார்பில் பல விளக்கங்கள் கொடுத்து சிந்தனைவளர உதவினர். இக்கருத்தரங்கு நற்பயன் அளித்ததாக யாவரும் அபிப்பிராயம் தெரிவித்துக் கொண்டனர்.

## குருவின் வெள்ளியூபிலிப் பலியில் 82வயது நிறைந்த பெற்ருேர்

இங்கிலாந்து தேசத்தில் 82 வயது நிறைந்த தமது தகப்பனுருக்கும் தாயாருக்கும் தமது 25-ம் வருட வெள்ளி யூபிலித் திருப்பலியை வண. ஜோண் மக்கோவ் சுவாமியார் சென்ற வாரம் தமது மேற்றிராணியாருடன் சேர்ந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார். அன்று தினம் அவரது பெற்ருேர் தம்பதிகளுக்கும் சுவாமியாருக்கும் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் விசேஷ வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தார். சென்ற வருடம் சுவாமியாரின் பெற்ருேர் திருமணம் செய்து தமது வைரயூபிலியைக் கொண்டாடியபோது பரிசுத்த தந்தை அவர்கள் இருவருக்கும் தமது விசேஷ குருசுச் சின்னத்தை அளித்துக் கௌரவித்திருந்தார்.

## மனந்திரும்புதலை எதிர்க்கச் சட்டம் ஏனே?

இந்திய உபகண்டத்திலே சில மாகாணங்களில் இந்து சமயத்திலிருந்து பிறசமயத்துக்கு மனந்திருப்பும் முயற்சிகளை அப்பிரிவுகளின் அரசாங்க சட்டத்தின் மூலமாகத் தடைசெய்ய முயற்சிகள் செய்யப்படுவது அப்பிரிவுகளின் சிறுபான்மைச் சமயத்தவர்களுக்கு ஒரு விந்தையாகத் தோற்றுகின்றது. இத்தகைய சட்டம் முதன்முதல் ஒறிசா மாகாணத்தில் பிறப்பிக்கப்பட்டு இப்போது குசருத்து ஆட்சிமன்றத்திலும் மசோதா நிலையில் தலைகாட்டியிருக்கிறது. இதை எதிர்த்து பௌத்தர் இஸ்லாமியர், கிறீஸ்தவர் ஒன்றுசேர்ந்து இதன் நீதியற்ற தன்மையை விளக்கி வருகின்றனர். இந்நாட்டிலுள்ள சகல சமயங்களுக்கும் நடுநிலைமை வகிக்க வேண்டிய அரசாங்கம் ஒரு சார்பாக சட்டம் வகுப்பதும் மக்கள் தமது மனச்சாட்சிக்கு தக்கபடி ஒழுகுவதற்குத் தடைவிதிப்பதும் இந்திய அரசியல் யாப்புக்கு முரண்பட்டதென்று அகில இந்திய கத்தோலிக்கசங்க பொதுச்செயலாளர் திரு. ஜே. சிருயன் அவர்கள் இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கு மனுச் செய்திருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறுவனைப் படிப்பித்தால் ஒரு தனி மனிதனைப் படிப்பித்ததாகும். ஒரு சிறு பெண்ணைப் படிப்பித்தாலோ அது ஒரு குடும்பத்தையே படிப்பித்ததாகும்.

— ஓர் அறிஞர்

சத்தியவேத பாதுகாவலன்

# எந்தை வாழ்க

புரட்டாசி 26 பல்வேறு நிகழ்ச்சிகளால் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. கத்தோலிக்க பக்தகோடிகளுக்கு அது பரிசுத்த தந்தையின் எழுபத்தைந்தாவது பிறந்த தினம். தந்தையின் பிறந்த தினத்தில் பிள்ளைகள் களிகூர்வதுபோல் நாம் களிகூர்ந்தோம். அவரது நிறைவான வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறினோம்.

இதேவேளையில், இந் நிகழ்ச்சி பாப்பரசரைப்பற்றிய விதவிதமான விமரிசனங்களுக்கும், வதந்திகளுக்கும் இடமளித்துவிட்டது. பாப்பரசர் ஓய்வு பெற்றுவிடுவாரா? என்பது உலகின் நாலாதிக்கிலும் எழும் ஒரு கேள்வி. திருச்சபை ஆயர்கள் எழுபத்தைந்து வயதானதும் தமது பதவியைத் துறக்கவேண்டுமென்ற ஒழுங்கைக் கொண்டுவந்த ஆறும் சின்னப்பர் தாமும் இவ்விதியைக் கடைப்பிடிப்பார் என்று பலர் எதிர்பார்த்தனர். எந்தவித ஆதாரமுமின்றி வதந்திகள் பரவின. பரபரப்பான செய்திகளை வெளியிட்டு உயிர்வாழும் பத்திரிகைகள் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை நழுவவிடுமா? பாப்பரசர் ஓய்வுபெறப்போகும் திகதியையும் இடத்தையுங்கூட ஒரு பத்திரிகை வெளியிட்டிருந்தது! இத்தனைக்கும், பாப்பரசர் ஓய்வுபெறும் நோக்கம் இல்லையென வத்திக்கான் தலைமைப்பீடம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

இதுமட்டுமா? அவரது ஆட்சியைப்பற்றி எத்தனை விமரிசனங்கள்! அவரது ஆட்சி தோல்வியடைந்துவிட்டதாம். தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அஞ்சி மனஞ் சோர்ந்துபோயிருக்கிறாராம். எதிர்க்கும் சக்திகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறாராம் என்று பற்பல அபிப்பிராயங்கள் திருச்சபை என்னும் மரக்கலத்தின் சாரதியும், இராயப்பரின் வழித்தோன்றலுமான எமது தந்தை சின்னப்பரைக் குறித்து நாள்தோறும் வெளியிடப்படுகின்றன. இதன் உண்மை என்ன?

அருளப்ப பாப்பரசரின் ஆட்சிக்குப்பின் சுதந்திரத்தைச் சுவைக்கத் தொடங்கிய கத்தோலிக்க உலகம் சில சமயங்களில் வரம்புமீறிப் போக எத்தனித்தது. சுதந்திரத்தின்பெயரால் காலத்தின் போக்குக்கேற்ப எல்லாவற்றையும் திருச்சபையினுள் புகுத்த முயற்சித்தவர்களுடைய எண்ணம் நிறைவேறவில்லை. சின்னப்பர் புதிய பாதையில் செல்பவர். எல்லாவற்றுக்கும் விட்டுக் கொடுப்பார் என்று நினைத்தவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்; எதிர்த்தனர். எத்தனையோ சமயங்களில் பலத்த எதிர்ப்புக்களுக்கிடையில் அவர் திருச்சபை ஒழுங்குகளை நிலைநாட்டவேண்டியிருந்திருக்கிறது. இதற்கு அசாதாரண மன உறுதி வேண்டும். இதைக் கோழைத்தனமென்று அழைப்பது? திருச்சபையின் இன்றைய பிரச்சினைகளும், உலகத்தை அலைக்கழிக்கும் தொல்லைகளும், தமது சொந்த மக்களின் அமைச்சலீனமும் பாப்பரசருக்குப் பெரும் தலையிடியாயிருப்பது உண்மையே. என்றாலும் இந்தப் பொறுப்புக்களுக்கு அஞ்சி ஓடிவிடும் கோழை அல்ல அவர். அவர் ஓய்வு பெறாமல் இருக்கிறாரென்றால் அது பதவியின்மீது கொண்ட மோகத்தினால் அல்ல, இந்தப் பிரச்சினைகளை மேற்கொள்வதற்கு தம்மால் ஏதாவது செய்யமுடியும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் வயதுசென்றபோதிலும் அவரது உடலோ உள்ளமோ தளர்ந்துபோய் விடவில்லை. எத்தனையோ புயல்களை அவரால் சமாளிக்கமுடியும். இறையருள் அவரைப் பாதுகாக்கும். அவரைத் தெரிந்து வழிநடத்திவரும் இறைவன் அவரைக் கைவிடப்போகிறாரா? அவரது ஆட்சியின் சிறப்பு இன்று தெரியாவிடினும் எதிர்காலம் அதற்குச் சான்றுபகரும்.

அதற்கிடையில் அவரது சொந்தமக்களாகிய நாம் அவரது ஆட்சி இனிது நடைபெறுமாறு வேண்டுவோமாக. பரிசுத்த தந்தைக்கு எமது பாதுகாப்பும் பாராட்டும் தேவையில்லை. ஆனால் எமது அன்பும் செபமும் தேவை. எனவே இன்னும் பல்லாண்டு வாழ்க என்று அவரை வாழ்த்தும்போதே அவ்வாண்டுகள் நிறைவுள்ளனவாக இருக்கும்படிக்கு இறைவன் அருள்புரிய வேண்டுமென மன்றாடுவோம்.

# இரத்தம் தோய்ந்த மண்

ரோமைச் சக்கரவர்த்தியான தியோக்கிளேசியன் கிறிஸ்து வேதத்தைத் தும்சம் செய்துவிடுவான் முனைந்து கிறிஸ்தவர்களை இம்சித்துத் துன்புறுத்திப் பயங்கர வேதகலாபனை நடாத்தியகாலம் அது. அப்பொழுது மார்க்கு, மற்செலீனு எனும் பிரபு குலத்தைச்சேர்ந்த சகோதரர்கள் இருவர் கிறிஸ்தவர்களெனக் கண்டுபிடிக்கப்பட்டார்கள், கைதுசெய்யப்பட்டார்கள், மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். இருவரும் கிறிஸ்து வேதத்தில் திடதைரியமாய் இருந்தமையாலே சக்கரவர்த்தியின் அச்சுறுத்தல்களிலோ அன்றேல் மகிமைவரிசைகள், பலவிதசன்மானங்கள் வழங்குவதாக அவன் கூறிய ஆசை வார்த்தைகளிலோ அவர்கள் அசைந்து கொடுக்கவில்லை.

அப்பொழுது வயதுசென்ற அவர்களின் தந்தையான பிரபு தனது புதல்வர்கள் இருவரையும் ஏககாலத்தில் இழந்து போகவிருப்பதையிட்டு மிகுந்த கவலை அடைந்தவராய், அவர்களிடம் சென்று தனது அந்திய காலத்திலே தன்னைக் கைவிடாதிருக்குமாறும், கிறிஸ்துவேதத்தைக் கைவிடுமாறும் கையெடுத்துக் கண்ணீர் ஆறாய்ப்பெருக எவ்வளவோ தூரம் இரந்து வேண்டினார். அவர்களோ இசைந்தபாடில்லை. ஆனால், அவர்களின் மனைவியர்களும், சிறு பிள்ளைகளும் அவர்களுடைய காலடிகளில்விழுந்து தங்களை அநாதாவாகவிட்டுப் போகவேண்டாமெனக் கதறியழுது சிந்தியகண்ணீரைப் பார்த்தபொழுது அவர்களின் கலங்காதமனம் கலங்கியது, பரிதபித்து இரங்கியது, கிறிஸ்து வேதத்தை மறுதலிக்க ஒருவாறு இசைந்துவிட்டார்கள். அதனால், அவர்களின் கைவிலங்குகள் கழற்றப்பட்டன.

இதனை அறியவந்தார் தீரவீர சேனாபதியான செபஸ்தியார். அவர்களைக் காப்பாற்றுமாறு சிறைச்சாலைக்கு விரைந்து சென்றார். திடமொழிகள் பகர்ந்தார், அவர்களின் விசுவாசத்தைத் திடப்படுத்தினார். அன்பர்களே, சம்மனசுகள் உங்களது வேதசாட்சிமுடிகளை ஏற்கனவே நிர்மாணிக்கத் தொடங்கி விட்டார்கள்; பிரபைவீசும் நித்திய பரகதியின் வாயிலில் உங்கள் பாதங்கள் ஏற்கனவே ஊன்றப்பட்டுவிட்டன; அஞ்சேல், அஞ்சேல்'' என்று வீராவேசத்துடன் தைரியமாக மொழிந்தார். அவர்கள் இருவரும் அவரின் திடமொழிகளைச் செவிமடுத்தே தங்கள் பலவீனத்தையும், மதியீனத்தையுமிட்டு மனம்வருந்தினார்கள். மனஸ்தாபக் கண்ணீர் சிந்தினார்கள், மனந்திரும்பினார்கள், திரும்பவும் கிறிஸ்துநாதரில் திடவிசுவாசம் கொண்டார்கள். ஏற்கனவே அவர்களுடைய கரங்களிலிருந்து கழற்றப்பட்ட கைவிலங்குகளைத் திரும்பவும் தங்கள் கைகளில் மாட்டிவிடும்படியாகக் கேட்டார்கள். இரத்தஞ்சிந்தி வேதசாட்சிகளானார்கள். அவர்களின் இரத்தம்தோய்ந்த மண்ணைக் கிறிஸ்தவர்கள் அள்ளிச்சென்று தங்கள் இல்லங்களில் பூச்சியமாகவைத்துப் பேணிவந்தார்கள்.

அவ்வாறாக, அதே வேதகலாபனையின்போது ஒரு தந்தையும், ஓர் இளைஞனான அவர் மைந்தனும் அஞ்ஞான தேவர்களுக்குத் தூபம்போடும்படியாகத் தியோக்கிளேசியனால் ஆஞ்ஞாபிக்கப்பட்டார்கள். ஒரு பிரபு குலப்பெருமகனான கிறிஸ்தவ தந்தையோ அச்சபயமேயில்லாது அஞ்சாநெஞ்சினராய் அரசனை விழித்து, ''யேசுக்கிறிஸ்துநாதரின் விலைமதிக்கப்படாத திரு இரத்தக் கிரையம் கொண்டு நான் அடைந்துகொண்ட வேதவிசுவாசத்தை மறுதலித்து, வேதத்தைக் காட்டிக் கொடுத்துத் துரோகஞ் செய்வதிலும் எனது உயிரைத் தியாகஞ்செய்வதே உசித''மெனத் திடதைரியமாகக் கூறினார்.

இதைக் கேட்டதே அரசன் வெஞ்சினம் கொண்டான். கிஞ்சித்தும் இரக்கசிந்தையின்றியே வாள்வீரனைக் கூவியழைத்தான். ஒரே வீச்சில் அவர் சிரசை வெட்டி வீழ்த்துமாறு ஆணையிட்டான். அக்கணமே அவருடையசிரசு துண்டிக்கப்பட்டு அவரும் உயிர் துறந்து வேதசாட்சி முடிசூடினார். இதைக் கண்ணுற்றதே இளைஞனான அவர் மைந்தன் திகில்கொண்டான். திடுக்காட்டம் அடைந்தான். அவன் கண்கள் கலங்கின, கண்ணீர் பெருகக் கதறியழுதான். கொண்ட பீதியால் அவன் முகம் வெளிறியது. அங்கம் பதறியது. அங்ஙனம் பதறி நின்ற இளைஞன்பால் அரசன் திரும்பினான். அவனிலே பரிவுற்றான்போல் பகருவான்: 'பாலியனே, உன் தந்தையைப்போல் அத்தனை பெரும் முட்டாளாய்—நிச்சயமாகவே ஒரு மூடனாய் நீ இருக்கமாட்டாயென நினைக்கின்றேன்; வா, வந்து நம் தேவர்களுக்குத் தூபம் போடு; உனது ஆருயிரை நான் பாதுகாத்து வைப்பது மாத்திரமல்ல, ஆனால், திரண்ட செல்வத்தையும், சிறந்த மகிமைவரிசையையும் உனக்குத்தருவேன்'' என உறுதி வாக்களித்தான்.

அரசன் இவ்விதம் வாக்களித்ததே வாலிபனின் உளத்தில் மகிழ்ச்சி பெருகியது. அவன் வதனத்தில் திரும்பவும் சிவந்த இரத்தம் சுவறியது, அரசனின் ஏமாற்றப் பேச்சில் எடுபட்டு விட்டான்போல் தோன்றியது. ஆனால், திடீரெனத் தந்தையின் குருதி தோய்ந்த மண்ணிலே அவனுடைய கண்பார்வை விழுந்தது. அவர் இறக்கும்பொழுது கூறிய வீரமொழிகள் அவன் செவிகளில் தொனிக்க, இதயத்தில் ஒருவித உத்வேகமும்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# யூகண்டாவில் கிறிஸ்தவர்கள் நூற்றுக்கு 63

யூகண்டா மக்களில் நூற்றுக்கு 63 சதத்தினர் கிறீஸ்தவர்கள். இந்நிலைமையை இந்நாடு சென்ற நூறு வருடங்களுக்குள்ளேயே அடைந்தது. 1870-ம் ஆண்டளவில் கீர்த்திமிக்க டேவிட் லிவிங்ஸ்ரன் என்பவர் ஆபிரிக்க உள்நாட்டைக் கண்டறிய ஆவலுடையவராய் விக்ரோறியா வாவிப் பிரதேசம் சென்றடைந்து அங்குள்ள சிற்றரசனால் வரவேற்கப்பட்டபோது தன் சிநேகிதனை லிவிங்ஸ்டனைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலால் தூண்டப்பட்ட ஸ்ரான்லி என்பவரும் அங்கு சென்றார். அங்கு சென்றதும் நிலைமையைக்கண்டு ஆங்கிலநாட்டு மிஷனறி சமூகத்தினருக்கு அவர் எழுதிய கடிதத்தில் அவர்கள் அப்பகுதிக்குச் சென்று கிறீஸ்தவ போதகம் செய்தால் அநேகரை மனந்திருப்பலாமென அறிவித்திருந்தார். ஆகவே, 1799-ம் ஆண்டில் ஆங்கில நாட்டு புரொட்டஸ்தாந்து சங்கத்தினர் யூகண்டாஎன அழைக்கப்படும் அப்பிரதேசத்துக்குச் சென்று கிறீஸ்தவபோதகம்செய்து அநேகரைமனந்திருப்பினர். ஒரு சில வருடங்களுள் இப்பிரதேசத்துக்குப் பிரான்ஸ் தேசகத்தோலிக்க குருமார் சென்று போதகம்செய்யத் தொடங்கி அங்குள்ள பலரைக் கத்தோலிக்க சமயத்திற் சேர்த்துக் கொண்டனர். அநேக வருடகாலங்களின்பின் அத்தேசத்தில் நடந்த வேதகலாபனையில் பல கத்தோலிக்கரும் புரொட்டஸ்தாந்தரும் உயிர் நீத்தனர். 1964-ம் ஆண்டு யூகண்டா வேதசாட்சிகளில் 22 பேருக்கு 6-வது சின்னப்ப பாப்பரசர் புனிதபட்டம் அருளினார். கிறீஸ்தவ சமயம் போதிக்கப்பட்டு 90 வருட காலத்தில் அங்குள்ள மக்களில் 64% கிறீஸ்தவர். அதில் கத்தோலிக்கர் 35%. இலங்கையின் சனத்தொகையளவே இன்றுள்ள யூகண்டா தேசச் சனத்தொகையும். அங்கே கத்தோலிக்க வேதமும் புரொட்டஸ்தாந்து சமயமும் விரைவாகப் பரவிவந்த தன் நியாயம் அங்குள்ள பொதுநிலை மக்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டதும், அவ்விசுவாசத்துக்காக எந்த தியாகத்தையும் செய்யத்தயாராயிருந்த மனநிலையுமேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்கொழும்பு கத். நியாயவாதிகள் சங்கவிழா

நீர்கொழும்புப் பிரிவில் கத்தோலிக்க நியாயவாதிகளின் சங்கவிழா இம்மாதம் 3-ம் திகதி மிக ஆடம்பரமாக நடந்தேறியது. அவர்களது சங்கப் பாதுகாவலராகிய புனித அல்போன்சஸ் லிகோரியாருடைய விழாத்தினம் அவர்களால் அன்று கொண்டாடப்பட்டது. நியாயவாதிகள் யாவரும் அவர்களது வேலையக உடுப்புகள் அணிந்து கிருன்ட் ஸ்றீற்றிலுள்ள தேவதாயாரின் திருஆலயத்தில் காலைத்திருப்பலியில் கலந்துகொண்டனர். நியாயவாதிகளுடன் அப்பிரிவில் தொண்டு புரியும் நியாயாதிபதிகளும் கொண்டாட்டத்தில் பங்குபெற்றனர். திருப்பலி அதிமேற்றிராசன துணை ஆயர் எட்மண்ட் பெர்ணாந்து அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் அன்று ஆற்றிய உரையில் கத்தோலிக்க நியாயவாதிகள் தமது உயர்ந்த சேவையின் அணிகலன்களாய் விளங்குவதுடன் தாம்வசித்துவரும்பகுதியுடன் சமூகசேவையின் முன்னணியில் துலங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## பெல்ஜிய தேசத்தில் கருதினல் மின்சென்ரிக்கு வரவேற்பு

பல வருடகாலம் ஹங்கேரி தேசத்தில் ஐக்கிய அமெரிக்க தூதரகத்தில் காலங்கழித்த முன்னுள் ஹங்கேரி தேசக் கருதினல் மின்சென்ரி அடிகளார் தற்போது அவுஸ்திரிய — ஹங்கேரி தேச எல்லைப்புறத்தில் வசித்துவருகின்ருர். இவர் சென்றவாரம் பெல்ஜிய தேசத்தில் வசித்துவரும் ஹங்கேரி தேசமக்களின் அன்பழைப்பை ஏற்று அங்கு சென்று புனித ஸ்ரீபின் அரசர் ஹங்கேரி தேசத்தில் வேத விசுவாசத்தைப் பரப்பிய ஆயிரம் வருடநிறைவை அவர்களுடன கொண்டாடி மீளவும் அவுஸ்திரியா சென்றுள்ளார். பெல்ஜிய தேசத்தில் அவர் செய்தபிரசங்கத்தில், ஹங்கேரி தேசத்தில் திருச்சபை சுதந்தரமிழந்து தவிக்கின்றதெனவும்; அவர் நாட்டைவிட்டுச் செல்வதாலுல் வாக்களிக்கப்பட்ட நன்மைகள் இன்னும் வத்திக்கானுக்குக் கிடைக்கவில்லையெனவும் எடுத்துக் காட்டியிருக்கிருர்.

## சமய கல்வியிலுள்ள குறைபாடுகள் அகற்றப்படவேண்டும்

சென்றவாரம் அகில இலங்கைக் கத்தோலிக்க சங்கத்தின் மத்தியகுழுவினர் குருநாகல் கன்னியர்மடக்கல்லூரியிற் கூடியபோது சிலாப மேற்றிராசன் துணை மார்க்ஸ் பெர்ணாந்து அடிகள் ஆற்றிய உரையில் இன்று எமது நாட்டில் கத்தோலிக்க சமயக் கல்விக்கு ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றை அகற்றக் கத்தோலிக்கரை முன்வருமாறு கேட்டுக்கொண்டார். அரசாங்கம் பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொண்டதன் பின்னர் சமயக்கல்வி பள்ளிக்கூடத்தலைமை ஆசிரியர்கள் தயவிலேயே தங்கியுள்ளது. குறிக்கப்பட்ட குருமாரைத் தவிரப் பிறர் பள்ளிக்கூடங்களுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே சமய அறிவும் அபிமானமுமுடைய பொதுநிலை மக்கள் இந்தப் பிரதானமான வேலையைக் கொண்டு நடத்த சமய அதிகாரிகளுக்கு ஊக்கத்துடன் உதவி புரியுமாறு கேட்டுக்கொண்டார்.

## வத்திக்கானில் பலசமய தொடர்பு முயற்சிகள்

2-ம் வத்திக்கான்சங்க முடிவுகளுக்கு இணங்க வத்திக்கான் அதிகாரிகள் உலகின் பிரதான சமயத்தவர்களுடன் கத்தோலிக்க திருச்சபை தொடர்பு கொள்ள சந்தர்ப்பங்களை உண்டாக்கிக்கொள்கின்றனர். வருகிற ஐப்பசி மாதம் 2-ம் திகதி தொடக்கம் 6-ம் திகதி வரையும் வத்திக்கானில் பிரதான சமயங்களாகிய பௌத்த, இந்து, முஸ்லிம் மத அறிஞர்களில் சிறந்த ஒவ்வொருவரை அழைத்து அவர்களது கொள்கைகளையும் ஆலோசனைகளையும் அறிந்துகொள்வார்கள். பௌத்த மதத்தின் சார்பாக அகில இலங்கை பௌத்தமத பொதுக் காரியதரிசி கலாநிதி மலாலசேகரா இரு சொற்பொழிவுகள் ஆற்றுவார். இந்துமத விளக்கம் இந்திய அறிஞர் கலாநிதி சிவராமன் அளித்தருளுவார். இஸ்லாமிய அறிஞர் ஒருவரும் அழைப்புப் பெற்றிருக்கிருர். இத்தகைய முறையில் பலமதத்தவர்களும் ஒருவரையொருவரை விளங்கிக் கொள்வதே உலக சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்குமுள்ள உறுதியான வழியென்றும் பௌத்தமதசார்பில் பேசத் தமக்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக தமது கடமைப்பாட்டையும் கலாநிதி மலாலசேகரா தெரிவித்திருக்கிருர்

**பொறுமை உணர்ச்சியை வேரோடு கிள்ளி எறிந்தவனே இரவிலும் பகலிலும் அமைதியாக இருக்கிருன்.**

# ஆடையலங்காரத்தில் அடக்க ஒடுக்கம்

### அலங்காரமா? அலங்கோலமா?

முழங்காலுக்கு மேல் நிற்கும் "மினிஸ்கர்ட்", அலங்கோலமாக வயிறு தெரியும்படி அணியும் சட்டை, ஆபாசமாக உடல் தெரியும்படி உடுத்தும் "லங்கை" சேலை சட்டை மேஸ்தர்கள்; காலின் தசைகளெல்லாம் விம்மிப்புடைக்க தோலோடு ஒட்டிப் போட்டதுபோல் உடலைக் 'கப்' பென்று கவ்விநிற்கும் டைற் பாண்ட் வகையராக்கள் —ஐயோ இன்னும் இவ்வரிசையில் எத்தனையோ அடுக்கலாமே! இத்தியாதிகளெல்லாம் நமது காலத்திய நாகரீகம் உருவாக்கி உலவவிட்டிருக்கும் 'பேஷன்கள்". நவீன ஆடை அலங்காரங்கள். 'ஆள் பாதி ஆடை பாதி' என்ற பழமொழியை விபரீதமாகப் புரிந்துகொண்டவர்கள் நாம். நாம் உடுத்துவது பாதி ஆடைதான் இப்போது! எவ்வளவுக்கெவ்வளவு ஒருவரின் ஆடையின் அகலமும் உயரமும் குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர் நாகரிகத்தில் உயர்ந்தவரென்று இன்றைய சமுதாயம் எடைபோடுகிறது. இந்த ஆடை குறைப்பு இயக்கம் நம்மை வடிகட்டின அநாகரிகத்துக்கே இட்டுச்செல்கிறது என்பதை நாம் உணர்கிறோமா?

### ஆடையின் தத்துவம் என்ன?

ஆடை மனித ஆளுமையின் வெளி அடையாளம். 'ஆள் பாதி ஆடை பாதி' என்பதற்கு அதுதான் பொருள். மிருகங்களுக்கு இல்லாத தன்மான உணர்ச்சியின் சின்னம் அது. மனிதனுக்கு மனிதன் என்ற மகிமையைத் தருவது அது. அதன் பொருட்டே வேத நூலில் இறைவனே ஆதிப்பெற்றோருக்கு ஆடைசெய்து அணிவித்தார் என்று உருவகமாகக் கூறப்பட்டுள்ளது. (ஆதி. 2:21). மேலும் மனித பண்பாட்டின் எல்லைக்கோடு ஆடை. அது குறையக் குறைய நாம் மனித வரலாற்றின் பழைய அத்தியாயங்களுக்கு செல்கிறோம். இயற்பிலேயே குறை ஆடை உடுத்திருப்பவர்களை பழங்குடிகள், நாகரிகத்தில்பண்படாதவர்கள், காட்டுமிராண்டிகள் என்றும் குறிக்கிறோம். மேலும் பண்பட்ட சமுதாயத்தில் பணிபுரிபவர்களின் வாழ்க்கை நிலையையும் அன்னார் எப்பணிக்காகத் தம்வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர் என்பதையும் படம்பிடித்துக் காட்டுவது ஆடை. இவ்வாறு மருத்துவர், சட்ட வல்லுனர், காவலர், நாடுகாக்கும் வீரர், துறவியர் முதலியோர் தத்தம் பணிக்கேற்ற ஆடை அணிவர்.

### உடலைக் காட்ட ஆடையா? உடலை மறைக்க ஆடையா?

மனிதனின் ஆளுமைச் சின்னமாக விளங்கும் ஆடை அணிதலில் ஒரு தனி அழகையும் தோற்றுவிக்கிறது. ஆடை அளவுக்குள் நிற்கும்போது அழகு. அளவில் குறையும்போது ஆபாசம். அளவை மிஞ்சும்போது கோமாளித்தனம். சிறப்பாக பெண்குலத்திற்கு ஆடை ஓர் அணிகலன். இறைவன் பெண்குலத்தை இயற்கையாகவே அழகோடும் மெருகோடும் படைத்திருக்கின்ருர். மனித சமுதாயத்தில் பெண்குலம் ஆற்றவேண்டிய இல்லறம் தாய்மை ஆகிய பணிகளை முன்வைத்தே அவ்வாறு படைத்துள்ளார். அத்தகைய அழகிற்கு அழகுசெய்வது பெண்ணின ஆடை. இறை நம்பிக்கையில் ஊன்றிநிற்கும் நம் தேயப் பண்பாடு இத்தகைய ஆடையை பெண்குலத்திற்கு வெறும் அணிகலனாக மட்டும் தரவில்லை. அவளது பெண்மைக்குப் பாதுகாப்பாகவும், அவளது தாய்மைக்குச் செலுத்தும் மரியாதை யாவும் உடல் முழுவதையும் மறைக்கும் நீண்ட ஆடையாகத்தந்தது! உடல் தெரிய உடுத்துவது நமது கலாச்சாரத்திற்கு உகந்ததல்ல! நமது பண்பாடுமல்ல! கிறிஸ்தவ ஒழுக்கமுமல்ல! உடலை மறைப்பதே ஆடையின் நோக்கம். உடலைக் காட்டுவதல்ல! பகுத்தறிவுகூடச் சொல்லுமே இவ்வுண்மையை.

### புதிய "பாஷன்கள்" உற்பத்தியாவது எவ்வாறு என்று தெரியுமா?

இது இவ்வாறு இருக்க அடக்க ஒடுக்கமற்ற புதிய மாதிரி ஆடைகள் உருவாகுவது எப்படி? ஒவ்வொரு பெரிய நகரத்திலும் ஆடையலங்காரத்தில் புதுப்புது மாதிரிகளைப் புகுத்த இரவு பகலாகத் திட்டமிட்டு உழைக்கும் ஒரு நாசகாரக்குழு உண்டு (Fashion Designers) பாரிஸ், ரோமை, நியூயார்க்கு ஆகிய இடங்களில இவ்வாறு புதுப்புது பாஷன்களை புகுத்தும் உலக கேந்திரங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு இலற்றில் வேலை செய்பவர்களின் ஒரே நோக்கம் பணம் திரட்டுவதும் தம்மை விளம்பரப்படுத்துவதுமே. எனவே ஒழுக்கநெறியைப்பற்றி எள்ளளவும் சிந்தியாது மனிதனின் கீழ்த்தரமான சிற்றின்ப உணர்ச்சிகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆடையில் புதிய "மாடல்" உருவாக்க இவர்கள் முற்படுவர். பெண்களின் ஆடையிற் புதிய "பாஷனை" புகுத்தும்போது அது ஆண்பாலரின் கவனத்தைச் சுண்டியிழுத்து சிற்றின்ப உணர்ச்சிகளை மழுப்பும் வகையில் அமைத்துவிடுவர். அப்போது தான் அவர்களுக்கு 'மார்க்கட்' கிடைக்கும். அவ்வாறே ஆண்பாலாரின உடையை அமைக்கும்போதும் பெண்பாலரின் உள்ளத்தில் தவருன எண்ணங்களைத் தோற்றுவிக்கும் வகையில் செய்துவிடுவர். இந்த மாடல்களைக் கேளிக்கை காட்சிகள், திரைப்படங்கள், தொலை தூரக் காட்சிகள், பத்திரிகைகள் வழியாக அறிமுகப்படுத்துவர். "ஆர்டர்கள்" ஆயிரம் அவர்களைத் தேடி வரும். விளம்பரமும் வியாபாரமும் பெருகும். காலஞ்சென்ற அமெரிக்க அதிபர் ஜாண் F. கென்னடியின் மூன்னுள் மனைவி ஜாக்குலின் தன் கணவர் பதவித் துவக்க முதல் 16 மாதத்திற்குள் 50,000 டாலருக்கு (ஏறக்குறைய ரூபா 450,000) புதிய மேஸ்தர் ஆடைகள் வாங்கியிருந்தாளாம். ஒரு பாஷஸ் போனதும் மறு பாஷனைப் புகுத்திவிடுவார். நம் வியாபாரிகள் ஆடை குறைப்பு இயக்கம் அவர்கள் துவக்கி வைத்ததுதான். அந்த அலங்கோலம் பத்திரிகைகள், திரைப்படங்கள் வழியாக நம் நாட்டில் இறங்கி நமது திரைகளில் ஏறி, நமது பத்திரிகைகளில் பரவி, நம் மையற்காரர்களையும் பிடித்துக்கொண்டு விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக நம் தன்மானத்தையும், ஒழுக்கத்தையும் ஆடையோடு சேர்த்து வெட்டிக்கொண்டே போகிருர்கள். எத்தனை மக்கள் இந்தப் பகிரங்கச் சதியை அறியாது அவர்கள் வெட்டித் தைத்துப்போடுவதை எடுத்து மாட்டிக்கொண்டு கிறிஸ்துவ ஒழுக்கத்திற்கு விலை கூறுமளவிற்குத் தெருவில் நடமாடுகின்றனர்! (வளரும்)

நன்றி: ஞானதூதன்.

## மலேசியாவில் நிரந்தர தியாக்கோன் நியமனம்

குருமார் தொகை மிகக் குறைவாயிருக்கும் பிரதேசங்களில் அவர்களால் செய்யப்படும் சில திருத்தொண்டுகளில் உதவிபுரிய அப்பிரதேச ஆயர்சபையின் விண்ணப்பத்தின்மேல் தகுதிவாய்ந்த பொதுநிலையினர் பாப்பரசரால் தியாக்கோன்மாராக அனுமதிக்கப்படலாமென வத்திக்கான் சங்கம் முடிவுசெய்திருந்தது. இதன்படி மலேசியாவில் நடைபெற பரிசுத்த தந்தை அனுமதித்திருக்கிருர். போர்ணியோ தீவின் ஒரு பகுதி மலேசிய பிரசாதிபத்தியத்தின் பாகமாயிருப்பதாலும் அங்கே குருமாரின் சேவை பெறுதல் மிகக் கடினமாயிருப்பதாலும் மலேசியாவில் இந்த ஒழுங்கு அவசியமாயிற்று. இந்த அனுமதியினுல் இப்பிரிவிலுள்ள மறுபாகங்களும் சிங்கப்பூர்ப்பிரிவும் சலுகைக்கு உரித்தாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1972-ம் ஆண்டுக்கான

# மறைக்கல்வித்தேர்வு மாதிரி வினாக்கள்

### ஐந்தாம் வகுப்பு

சுட்டிலக்கம்........ நேரம்: 1மணி.

1. கீறிட்ட இடங்களிற் பொருத்தமான சொற்களிட்டு நிரப்புக.

(அ) யேசுநாதர்... ....... நதியில் ஞானஸ்நானம் பெற்ருர்.
(ஆ) யேசுநாதரை மறுதலித்த சீஷனின் பெயர்..............
(இ) ................ ஆண்டவரின் நாளாகும்.
(ஈ) யேசுவின்பலி ............ எப்போதும் புதுப்பிக்கப்பட்டு எமது பலியாக மாறுகின்றது.
(உ) பிறரைப் பழிவாங்குதல் .........ம் கற்பனைக்கு விரோதமான பாவமாகும்.

2. பின்வருவன சரியாயின் 'சரி' என்றும், பிழையாயின் 'பிழை' என்றும் எழுதுக.

(அ) யேசுவை உட்கொள்ளுவதற்கு, சாவான பாவமில்லாமல் ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் ( )
(ஆ) பாஸ்குகாலத்தில் தேவநற்கருணை உட்கொள்ள வேண்டுமென்பது சருவேசுரனுடைய கட்டளை ( )
(இ) கடைசிநாளில் நடக்கும் தீர்ப்புக்குப் "பொதுத் தீர்ப்பு" என்று பெயர் ( )
(ஈ) கிறீஸ்துநாதரே பரலோக மந்திரத்தை அப்போஸ்தலர்களுக்குப் படிப்பித்தார் ( )
(உ) செபமாலையின் மூன்ரும்மகிமைத் தேவ இரகசியம், தேவமாதா விண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டது ( )

3. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

(அ) யேசுநாதர் இறந்த இளைஞனுக்கு உயிர் கொடுத்தது (கானுவில், நயீமில், ஜெருசலேமில்).
(ஆ) கிறீஸ்துநாதர் தேவ நற்கருணையை ஏற்படுத்திய தினம் (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரியசனி)
(இ) ஏழை லாசாருக்கு உதவிசெய்யாத செல்வந்தன் செய்த பாவம் (கோபம், காய்மகாரம், உலோபித்தனம்)
(ஈ) நான் இந்த மனிதனிடம் "எந்தக் குற்றத்தையும் காணவில்லையே" என்று (கைப்பாஸ், பிலாத்து, ஏரோது) கூறினுன்.

4 "அ" பகுதிக்குப் பொருத்தமான சொல்லை "ஆ" பகுதியிலிருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை "அ" பகுதியுடன் இணைத்து எழுதுக. எடுத்துக்காட்டு: (அ) தேவநற்கருணை பெறுவதற்கான வழிகள். (4) தேவதிரவிய அனுமானங்களும், செபமும்.

| பகுதி "அ" | | பகுதி "ஆ" |
|---|---|---|
| (அ) தேவநற்கருணை பெறுவதற்கான வழிகள். | ( ) | (1) அன்பை அளவுகோலாகக் கொண்டு. |
| (ஆ) நமது மனச்சாட்சியை வழிநடத்துபவை. | ( ) | (2) விசுவாச மந்திரம். |
| (இ) பெந்தேகோஸ்த் என்பதன் பொருள். | ( ) | (3) கிறீஸ்துநாதரின் படிப்பினைகள். |
| (ஈ) வேதசத்தியங்களை அடக்குகின்றது. | ( ) | (4) தேவதிரவிய அனுமானங்களும் செபமும். |
| (உ) கடைசிநாளில் கிறீஸ்துநாதர் நம்மைத் தீர்வையிடுவது | ( ) | (5) பரிசுத்த ஆவியின் வருகை. |

5. பின் வருவனவற்றிற்கு ஒருசொல்லில் விடை எழுதுக.

(அ) ஸ்நாபக அருளப்பரின் தந்தையின் பெயர் யாது?
(ஆ) நம் மோட்சதந்தை நம்மேற் கொண்டுள்ள அன்பையும், இரக்கத்தையும் விளக்கிக்காட்ட யேசுநாதர் சொன்ன உவமை யாது?
(இ) யேசுநாதரை யூதாஸ் காட்டிக்கொடுத்தது ஏன்?
(ஈ) நான்காவது துக்கதேவ இரகசியம் எது?
(உ) திருச்சபையின் காணக்கூடிய தலைவராக யேசு யாரை நியமித்தார்?

6. பின்வரும் சொற்கூட்டத்தில் பொருத்தமில்லாத சொல்லின் கீழ்க் கீறிடுக.

(அ) ஸ்நாபக அருளப்பர், சூசையப்பர், சக்கரியாஸ், எலிசபேத்
(ஆ) கோயில் பூசுதல், நற்கருணை, திவ்வியபூசை, பாவசங்கீர்த்தனம்.
(இ) களவாடுதல், அனுப்புதல், பிறர் உடைமைகளைக் கவருதல், அடக்கமின்மை.
(ஈ) கனமான தவறு, அற்பதுரோகம், பூரண அறிவு, முழுச் சம்மதம்.

7. பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

(அ) "நாங்கள் இரட்சகரைக் கண்டோம்."
(ஆ) "நீங்களும் போய்விடுவீர்களா?"
(இ) "தாவீதின் மகனே, என்பேரில் இரக்கமாயிரும்."
(ஈ) "நான் யாருக்கு முத்தம் கொடுக்கிறேனே அவனைக் கைது செய்யுங்கள்."
(உ) "உங்களுக்குச் சமாதானம்."

8. பின்வரும் வினுக்களுக்கு விடை தருக.

(1) தகுந்த முறையில் பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு நமக்குத் தேவையானவை என்ன?
(2) யேசுநாதர் எதற்காக அப்போஸ்தலரைத் தெரிந்து கொண்டார்?
(3) எம்மிடம் எப்போது தேவசிநேகம் உண்டு?
(4) தேவநற்கருணை பெற்றபின் நன்றியாக நீர் சொல்லக்கூடிய ஒரு சிறுசெபம் எழுதுக?
(5) உமது நாளாந்தவாழ்வில் நீர் செய்யக்கூடிய மூன்று நற்செயல்களை எழுதுக.

---

## கேளுங்கள்

# தருகிறேன்

| | |
|---|---|
| சதாசகாயமாதா பெரிய பிரார்த்தனை ... | 25 |
| அந்தோனியார் பெரிய பிரார்த்தனை மங்களம் ... | 25 |
| அந்தோனி. அம்மானை ... | 1-00 |
| அந்தோனி மன்ருட்டு பிரார்த்தனை ... | 50 |
| நடுத்தீர்வை உலா ... | 1-00 |
| சிந்தாகுலத் திரட்டு ... | 1-00 |
| புதிய ஏற்பாடு ... | 5-00 |
| அந்தோனி சத்துரு சங்காரமாலை ... | 3-00 |
| யூதாததேயு மன்ருட். பிரார்த்தனை ... | 25 |

முற்பணம் அனுப்பாத தபால்கள் கவனிக்கப்பட மாட்டாது.

**எஸ். எம். இன்னுசிமுத்து**
உபதேசியார்,
சென் தோமஸ்வீதி, மாதகல். P.O.

---

# இரத்தம் தோய்ந்த....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்சாகமும் பிறக்க, உடனே குனிந்து தந்தையின் குருதி தோய்ந்த மண்ணில் ஒரு கைபிடிமண்ணை, எடுத்தான். அதனைக் கெட்டியாகப் பொத்திப் பிடித்துக்கொண்டு, "அரசே, நான் சற்றே மனந்தளர்ந்தேன்; உனது உறுதி வாக்கினுல் விட்டுக்கொடுக்க மனங்கொண்டேன்; ஆனல், இப்பொழுதோ என் தந்தையின் இரத்தத்தால் நான் திடமடைந்தேன்; யேசுக்கிறிஸ்துநாதரின் விலைமதிக்கப்பட்டாத திரு இரத்தக்கிரையம் கொண்டு நான் பெற்றுக்கொண்ட வேதவிசுவாசத்தை மறுதலிப்பதைக் காட்டிலும் அவரைப்போல் நானும் உயிர் துறப்பேன்" என்று துணிவாகப் பகர்ந்தான்.

இந்தவார்த்தைகள் அரசனின் செவிகளில் நாராசம் போல் வீழ்ந்ததே அவன் மிகுந்த ஆத்திரமும், கோபாவேசமும் கொண்டான். பக்கத்தில்நின்ற வாள்வீரனை விழித்து, அவனையும் வெட்டிக் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான், உடனே அப்பாலியனின் சிரசும் வாளால் துண்டிக்கப்படவே, தந்தையின் இரத்தத்துடன் அவனுடைய இரத்தமும் இரண்டறக்கலந்தது. வேதசாட்சி முடிபெற்று அவனுடைய ஆன்மாவும் விரசொர்க்கம் அடைந்தது. சுபம்!

(எவ். மேர்வின் டி. குருஸ் எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.)

---

# அறிவித்தல்

பரிசுத்த அடைக்கலநாயகி சகாயநிதிச் சங்கத்தில் இதுகாலவரை பணம் வசூலிப்பவராகக் கடமையாற்றிவந்த திரு. எஸ். ஏ. அலோசியஸ் என்பவருக்கும், மேற்படி சங்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதைச் சங்க அங்கத்தவர்களுக்கு அறியத் தருகிறேம் இனிமேல் பணம் கட்டுபவர்கள் நேரடியாகச் சங்கக் காரியாலயத்தில்பணம் கட்டி, பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேம்.

நிர்வாக சபையினரின் சார்பில்
**எஸ். ஆர். நெவின்ஸ்,**
தலைவர்.

அடைக்கல. சகாய. சங்கம்,
நம். 83, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம், 25-9-72.

---

✠

# 7-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம்: 29-11-1902 மறைவு: 1-10-1965

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

திரு. அர்தோனி, இம்மனுவேல் பெர்ணண்டோவின் ஆன்ம சாந்திக்காக மன்னர். அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் எதிர் வரும் ஐப்பசி மாதம் 2-ந் திகதி திங்கட்கிழமை காலை 6-0ப மணியளவில் துக்கப் பாடர்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். உறவினர், சிநேகிதர் இதில் பங்கு பற்றுமாறு வேண்டுகின்றேம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி: மேரி மார்த்தம்மாள் இம்மனுவேல் பெர்ணண்டோ

மக்கள்: இமாக்குலேற், அளற்ரு, இம்மனுவேல் பெர்ணண்டோ, பமிலா பேப்பற்றுவா இம்னுவேல் பெர்ணண்டோ.

மெயின்வீதி,
மன்னர்.

---

## அமெரிக்க

# புதிய ஸ்தானிகர்

திரு கிறிஸ்ரபர் வான் ஹொலன் அவர்களை இலங்கைக்கு அமெரிக்க ஸ்தானிகராக நியமிக்கத் தாம முடிவு செய்துள்ளதாக ஜனதிபதி நிக்ஸன் செவ்வாய்க்கிழமையன்று அறிவித்தார். திரு. வான் ஹொலன் மாலைதீவுக் குடியரசிற்கும் அமெரிக்க ஸ்தானிகராகபணியாற்றுவார்.

இலங்கையில் முன்னர் அமெரிக்க ஸ்தானிகராகப் பணியாற்றி பின்னர் பெல்ஜியம் நாட்டிற்கு ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட றெபேட் ஸ்ரோஸ் ஹுப்பே அவர்களின் ஸ்தானத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்க வெளிநாட்டு சேவையின் ஒரு முதலாம்தர அதிகாரியான திரு வான் ஹொலன் தற்பொழுது இராசாங்க இலாகாவின் அண்மைக்கிழக்கு தென் ஆசிய விவகாரப்பிரிவின் பதில் உதவிக் காரியதரிசியாகப்பணியாற்றிவருகிருர்.

திரு.வான் ஹொலன் மேரிலாந்தில் பல்றிமோர் என்னுமிடத்தில் 1922-ம் ஆண்டு பிறந்தார். 1947-ம் ஆண்டில் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்ற இவர், 1951-ம் ஆண்டில் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் கலாநிதி பட்டத்தைப் பெற்ருர். இவர் 1943-ம் ஆண்டுமுதல் 1946 ஆண்டுவரை அமெரிக்க கடற்படையில் ஓர் அங்கத்தவராகவும் இருந்தார்.

1947-ம் ஆண்டுமுதல் 1951-ம் ஆண்டுவரை ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞான போதனசிரியராகப் பணியாற்றிய இவர், 1951-ம் ஆண்டில் அமெரிக்க இராஜாங்க இலாகாவில் பணியாற்றத் தொடங்கினர். இவர் புதுடில்லி, கல்கத்தா, கராச்சி, அங்கார ஆகிய இடங்களில் முன்னர் பணியாற்றியுள்ளார்.

---

# மிலான்நகர தேவாலயத்துக்கு அபாயம்

மிலான் நகர அதிகாரிகள் அங்குள்ள மாதேவாலய கட்டிடத்துக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை நீக்க 'தேவாலய சதுரம்' எனப்படும் பகுதியில் மோட்டோர் போக்குவரத்தை தடைசெய்திருக்கிறுர்கள். இச்சதுரம் அந்நகரத்தில் மிகப்பிரதான பகுதியாயிருக்கின்றது. ஆகவே, இத்தடை மக்களுக்குப் பெரும் வசதியீனங்களுக்குக் காரணமாயிருந்த பொழுதிலும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இம்மா தேவாலயத்தை மேலும் பழுதுருது காக்க அவசியமாகிறது. இத்தேவாலயம்கட்டி எழுப்புவதற்கு 423 வருடங்கள் எடுத்ததெனக் கூறப்படுகிறது. கட்டிடத்தில் 135 கூர்க்கோபுரங்களும் வெளிப்புறத்தில் 2,300 சிலைகளும் அழகூட்டுகின்றன. மோட்டோர் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டது மாத்திரமன்றி அண்மையில்செல்லும் புகையிரதங்களும் மெல்லெனப்போகக் கட்டளை விதிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தைப் பலப்படுத்த வேலைகள் நடைபெறுகின்றன.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஞு புரட்டாமாதம் 30-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org